# முதல் திருப்புதல் பொதுத்தேர்வு - 2023

C

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண் :

## தமிழ்

நேரம் : 3.00 மணி — மதிப்பெண்கள் : 90

பகுதி - I

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 14 x 1 = 14

1. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்பமாதவன் குறிப்பிடுவது
   அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள்
   இ) மழைத்துளிகள் ஈ) நீர் நிலைகள்
2. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை,
   அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்
   இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும்
3. சுவர்க்க நீக்கம் என்ற நூலின் ஆசிரியர்
   அ) மில்டன் ஆ) ஷேக்ஸ்பியர் இ) கீட்ஸ் ஈ) வேர்ட்ஸ்வொர்த்
4. காய்முன் நேர் வருவது
   அ) இயற்சீர் வெண்டளை ஆ) கலித்தளை
   இ) வெண்சீர் வெண்டளை ஈ) ஒன்றிய வஞ்சித்தளை
5. கீழ்க்கண்ட நூல்களுள் வள்ளலார் இயற்றாத நூல் எது?
   அ) திருவாசகம் ஆ) மனுமுறை கண்ட வாசகம்
   இ) திருவருட்பா ஈ) ஜீவகாருண்ய ஒழுக்கம்
6. "வெந்தாறு பொன்னின் அந்தி பூப்ப" - இக்கவிதையில் ______ பயின்று வந்துள்ளது.
   அ) வினைப் படிமம் ஆ) மெய்ப் படிமம் இ) பயன் படிமம் ஈ) உருப்படிமம்
7. ஆர்ப்பரிக்கும் கடல்
   அதன் அடித்தளம்
   மௌனம் ; மகா மௌனம் - அடிகள் புலப்படுவது
   அ) இரைச்சல் ஆ) குறைகுடம் கூத்தாடும்
   இ) நிறைகுடம் நீர்த்தழும்பல் இல்
   ஈ) புற அசைவுகள் அகத்தினை அசைக்க இயலாது
8. சிதம்பர ஸ்மரண - இந்நூலின் ஆசிரியர் ______.
   அ) பாலசந்திரன் சுள்ளிக்காடு ஆ) சிவாஜிகணேசன்
   இ) பாலசந்திரன் ஈ) ராஜீவ் நாத்
9. அதிசய மலரின் புன்னகையைப் பிடித்தவாறு தமிழ்நதி கடக்கச் சொல்வது
   அ) கடந்த காலத் துயரங்களை ஆ) ஆட்களற்ற பொழுதை
   இ) பச்சையம் இழந்த நிலத்தை ஈ) அனைத்தையும்
10. 'முகம்' என்னும் தலைப்பில் அமைந்த கவிதை இடம்
    அ) புதையுண்ட வாழ்க்கை ஆ) சுகந்தி சுப்பிரமணியன் படைப்புகள்
    இ) கொடி விளக்கு ஈ) மீண்டெழுதலின் ரகசியம்
11. ஈரொற்றாய் வராத வல்லின மெய்கள் எவை?
    அ) க், ச் ஆ) ட், ற் இ) ப், ம் ஈ) ந், ழ்
12. உலகப் புவி நாள் ______.
    அ) மார்ச் 22 ஆ) ஏப்ரல் 22 இ) மார்ச் 21 ஈ) ஏப்ரல் 21
13. ஒருமையுடன் - என்னும் சொல்லுக்குரிய புணர்ச்சி விதி
    அ) ஈறுபோதல் முன் நின்ற மெய் திரிதல் ஆ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
    இ) இஈ ஐ வழி யவ்வும் உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
    ஈ) ஈறு போதல், இனமிகல்

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



14. அகநானூறு, நித்திலக் கோவையில் இடம்பெறும் பாடல்களின் எண்ணிக்கை
அ) 120 ஆ) 100 இ) 180 ஈ) 108

பகுதி - II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக.**

பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக :** 3 x 2 = 6

15. "முன்னம் ஒரு நாள் பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தாய்" - யார், யாரைப் பற்றி கூறியது?
16. சிலப்பதிகாரத்தின் வேறு பெயர்கள் யாவை?
17. எவற்றை நாம் வரவேற்று விருந்தோம்ப வேண்டும் என்று 'ஜலாலுதீன் ரூமி' கூறுகிறார்?
18. முகம் முகவரியற்றுப் போனதற்கு சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணத்தை எழுதுக.

பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக :** 2 x 2 = 4

19. வித்தியாரம்பம் என்பது யாது?
20. மீ சேய்மைக் காட்சித் துணிப்பு என்றால் என்ன?
21. மயிலை சீனி.வேங்கடசாமி ஆற்றிய பணிகள் யாவை?

பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக :** 7 x 2 = 14

22. **பொருளுணர்ந்து சொற்றொடரில் அமைத்து எழுதுக :**
களம், கலம்
23. **பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக :**
அண்ணைக்கு அவனுக்குப் பணம் குடுத்து ஒதவியிருக்க வேண்டியதான
வூட்டாண்ட வெளையாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு
24. பூம்பாவாய் - பிரித்து புணர்ச்சி விதி கூறுக.
25. **கீழ்க்காணும் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக :**
அ) வழிவழியாக ஆ) ஆணி அடித்தாற்போல
26. வெண்பாவின் ஈற்றுச்சீரில் வரும் வாய்ப்பாடுகள் யாவை?
27. **கலைச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்கள் தருக :**
அ) Internet banking ஆ) Departure
28. **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக :**
என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதியத் தலைமுறை மீது தான் ;
அவர்கள் எல்லா பிரச்சனைகளையும் ஒரு சிங்கத்தை போல எதிர்கொண்டுத் தீர்ப்பார்கள்.
29. **பேச்சுவழக்கில் தொன்மம் வெளிப்படும் தொடர்களை எழுதுக.**
30. கண்டான் - உறுப்பிலக்கணம் தருக.

பகுதி - III

**ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை தருக :**

பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக :** 2 x 4 = 8

31. ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
32. வள்ளலார் கந்தகோட்டத்து இறைவனிடம் வேண்டுவதை தெய்வமணி மாலை பாடல் வழி வரிசைப்படுத்துக.
33. நெல்லின் நேரே வெண்கல் உப்பு - பண்டமாற்று வணிகத்தை இத்தொடரின் வழி விளக்குக.
34. கடையெழு வள்ளல்களையும் அவர்கள் செய்த செயல்களையும் அட்டவணைப்படுத்துக.

பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக :** 2 x 4 = 8

35. புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த உலக நாடுகள் எத்தகைய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன?

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



36. எழுத்தாணிகள் - குறிப்பு எழுதுக.
37. நேர மேலாண்மை குறித்து விளக்கி எழுதுக.
38. இந்தோ-சராசனிக் கட்டடக் கலை குறித்து எழுதுக.

பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக :** 3x4=12

39. வாகைத் திணை *(அல்லது)*
தொழில் உவமையணியைச் சான்றுடன் விளக்குக.

40. **கீழ்கண்ட பாடலைப் படித்துணர்ந்து அதன் மையக் கருத்தை எழுதி, ஏதேனும் மூன்று நயங்களை எழுதுக.**

பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வாராதப்பா !
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டுமப்பா !
நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற்குலத்தார் !
தின்மை செய்பவரே - அண்டித்
தீண்ட ஒண்ணாதார்
- கவிமணி தேசிக விநாயகம்

41. பேராசை பெருநஷ்டம் *(அல்லது)* சிறுதுளி பெருவெள்ளம்
என்னும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக.

42. **தமிழாக்கம் தருக :**
1. Learning is a treasure that will follow its owner everywhere.
2. A new language is a new life.
3. If you want people to understand you, speak their language.
4. Knowledge of languages is the doorway to wisdom.

43. **கவிதை புனைக:**
காடு (அல்லது) நட்பு

பகுதி - IV

**இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக :** 3x6=18

44. அ) செய்ந்நன்றி அறிதல் அறம் என்பதனை வாயுறைவாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.
*(அல்லது)*
ஆ) நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையை விளக்குக.

45. அ) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக் காட்டி விளக்குக.
*(அல்லது)*
ஆ) நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

46. அ) தலைக்குளம் சிறுகதையின் மூலம் நகரமயமாதலினால் ஏற்படும் பாதிப்புகளை எடுத்துரைக்க.
*(அல்லது)*
ஆ) மகாநடிகரைக் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

பகுதி - V

47. **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக :** 4+2=6
அ) "பாதகர் குழுமி ......." எனத் தொடங்கும் இரட்சணிய யாத்திரிகப் பாடல்
ஆ) "மகற்கு" என முடியும் குறட்பா

******

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com